சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் 12.09.2025

வா.சா.1 –பெரியகருப்பன் S/o முத்தழகு

OS No.174/2023 C/w 48/2024

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

நான் இந்த வழக்கை OS 174/2023 தாக்கல் செய்ததை பின்னிட்டு மற்றொரு வழக்கான OS 48/2024 என்ற வழக்கை அதே பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 2 வழக்குகளும் சேர்ந்து விசாரணைக்கு எடுத்து கொள்ளவேண்டும் என்று மேற்குறிப்பு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மேற்குறிப்பானது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி 2 வழக்குகளும் சேர்ந்து நடத்த உத்தரவாகிவிட்ட நிலையில் OS 48/2024 வழக்கில் நிருபண வாக்குமூலமும் தனிப்பட்ட ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் படிக்கவில்லை. நான் வட்டிக்கு பணம் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வரவு, செலவு தொழில் செய்து வரவில்லை. பிரதிவாதி என்னிடம் அவ்வப்போது, கைமாற்றாக பணம் வாங்கி செல்வது வழக்கம் என்று என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான. மேற்படி வரவு, செலவு குறித்த ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை. பழக்கத்தின் அடிப்படையில்தான் கொடுப்பேன். எனக்கும், பிரதிவாதிக்கும் வரவு, செலவு இருந்திருந்தால் ஆவணங்கள் இருக்கும் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு எழுதி

கொடுக்கும்போது கருப்பையா என்பவர் தான் தயாரித்தார். செல்வராஜ் மற்றும் அவரது மனைவி உடன் இருந்தார்கள். என்னுடைய மனைவி ராமசுந்தரியும் உடன் இருந்தார். என்னுடைய மனைவி ராமசுந்தரியை விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. ஈடுகடன் பத்திரம் அடிப்படையில் வருடத்திற்கு 2 சதவிகித வட்டி என்று பேசப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் பின்யோசனையுடன் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மாதம் ஒன்றுக்கு 2 % வட்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(மேலும் சாட்சி வேண்டுகோளுக்கிணங்க ஈடுகடன் அடமான பத்திரம் குறியீடு செய்வதற்காக வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.09.12 17:48:42 +0530

Sub Judge

Melur